بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 13/09/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**அகழ்ப் போரின் பின்னணியில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அம்சங்கள்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

அஹ்ஸாப் போர் பற்றி கடந்த குத்பாவில், கைபரின் யூதர்களின் வாக்குறுதிமீறல் மற்றும் வன்மத்தின் காரணமாக, முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுத்து அவர்களை ஒழிப்பதற்காக எவ்வாறு காஃபிர்களின் ஒரு படை உருவானது என்பது கூறப்பட்டது. இதற்கான மேற்கொண்ட விவரம் வரலாற்றிலிருந்து இவ்வாறு கிடைக்கிறது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸுலைத் (ரலி) அவர்கள் மற்றும் சுஃப்யான் பின் அவ்ஃப் அஸ்லமீ (ரலி) அவர்களைப் படைகளைப் பற்றி செய்தியறிந்து வருவதற்காக அனுப்பினார்கள். இவர்கள் இருவரும் சென்றபோது, பகைவர்கள் இவர்களைப் பார்த்து விட்டனர். இவர்கள் இருவரும் போரிட்டவாறு ஷஹீது ஆகி விட்டார்கள்.

அகழ் தோண்டுவதாக முடிவானதும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது குதிரையில் பயணமானார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் பல முஹாஜிர்களும் அன்ஸாரிகளும்கூட இருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் படை முகாமிடுவதற்காக இடத்தைத் தேடினார்கள். முஸ்லிம்கள் பனூ குறைஸா கோத்திரத்திடமிருந்து, கடப்பாரைகள், பெரிய கோடாரிகள், மண் வெட்டிகள் போன்ற தோண்டுவதற்கான பல கருவிகளைக் கடனாக வாங்கினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அகழின் ஒவ்வொரு பக்கத்தைத் தோண்டும் பணியையும் ஒரு சமுதாயத்திடம் ஒப்படைத்து விட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தாமும் தோண்டும் பணியில் பங்கெடுத்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது முதுகும், வயிறும் புழுதிபடியும் அளவுக்குத் தமது முதுகில் மண் சுமந்தார்கள். தங்களுக்கான பகுதியை முடித்துவிடும் முஸ்லிம்கள், அகழ் முழுமையடையும் வரை மற்றவர்களுக்கு உதவச் சென்று வந்தார்கள். அகழ் தோண்டுவதில் எந்த முஸ்லிமும் பின் தங்கியிருக்கவில்லை. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கும் கூடைகள் கிடைக்காத போது, விரைவாகத் தங்களது ஆடைகளைக் கொண்டு மண்ணை இடம் மாற்றுவார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்களும் இதைப் பற்றி எடுத்துக் கூறியுள்ளார்கள். அன்னார் கூறுகிறார்கள்: இவ்வளவு பெரிய படையின் அசைவுகளை மறைத்து வைப்பது காஃபிர்களுக்கு சிரமமாக இருந்தது. பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஒற்றறிவதற்கான ஏற்பாடும் மிகவும் உறுதி வாய்ந்ததாக இருந்தது. குறைஷியர்களின் படை மக்காவிலிருந்து புறப்பட்டுதான் இருந்தது; அதற்குள், பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அவர்களைப் பற்றிய செய்தி

சென்றடைந்து விட்டது. இதனால் பெருமானார் (ஸல்) அவர்கள் சஹாபாவிடம் ஆலோசனை செய்தார்கள்.

இந்த ஆலோசனையில் ஈரானின் ஒரு கலப்பற்ற சஹாபி ஹஸ்ரத் சல்மான் ஃபார்சீ (ரலி) அவர்களும் இருந்தார்கள். அவர்கள் அரேபியர் அல்லாதவர்களின் போர் வழிமுறையை அறிந்திருந்தார்கள். அவர்கள், 'மதீனாவின் பாதுகாப்பற்ற பகுதிக்கு முன்னால் ஒரு நீளமான மற்றும் ஆழமான அகழ் தோண்டி நம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்' என்ற ஆலோசனையை முன் வைத்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த ஆலோசனையை ஏற்றார்கள். மதீனா மாநகரம் மூன்று திசைகளிலிருந்தும் ஓரளவுக்குப் பாதுகாப்பாக இருந்தது. சிரியாவின் திசை மட்டுமே எதிரி அந்தப் பக்கமாக திரளாக வந்து மதீனாவின் மீது தாக்குதல் தொடுக்க முடிகின்ற வகையில் இருந்தது. எனவே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்தப் பாதுகாப்பற்ற பக்கத்தில் அகழ் தோண்டுமாறு கட்டளையிட்டார்கள்.

அன்னார் சுயம் தமது கண்காணிப்பில் நிலத்தில் அடையாளமிட்டு பணி பிரித்துக் கொடுக்கும் வழிமுறையின் அடிப்படையில் அகழைப் பத்துப்பத்துக் கைகள் அளவுக்கு, அதாவது, 15, 15 அடிகளில் பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதியையும் பத்துப்பத்து சஹாபாவிடம் ஒப்படைத்தார்கள். இந்தக் குழுக்களைப் பிரிப்பதில், 'ஹஸ்ரத் சல்மான் ஃபார்சீ (ரலி) அவர்கள் எந்தக் கூட்டத்தில் சேர வேண்டும்? அவர்கள் முஹாஜிராகக் கருதப்பட வேண்டுமா அல்லது இஸ்லாம் வருவதற்கு முன்னரே மதீனாவுக்கு வந்திருந்தார்கள் என்பதனால் அன்ஸாரிகளில் கணக்கிடப்பட வேண்டுமா?' என்ற மகிழ்ச்சிகரமான கருத்து வேறுபாடு வெளிப்பட்டது. இறுதியில் இந்தக் கருத்து வேறுபாடு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேலான பார்வைக்கு முன் வைக்கப்பட்டது. பெருமானார் (ஸல்) அவர்கள் புன்சிரித்தவாறு, "சல்மான் இருவரையும் சேர்ந்தவர் இல்லை. மாறாக, 'سَلْمَانُ مِنَّا اَهْلَ الْبَيْتِ' அதாவது, சல்மான் எனது வீட்டாரில் ஒருவராகக் கணக்கிடப்பட வேண்டும்" என்று கூறினார்கள். அந்த நேரத்திலிருந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வீட்டு நபராகக் கருதப்படும் கண்ணியம் ஹஸ்ரத் சல்மான் ஃபார்சீ (ரலி) அவர்களுக்குக் கிடைக்கப் பெற்றது.

அகழ் தோண்டும் தீர்மானம் உறுதியான பிறகு, சஹாபா பெருமக்கள் கூட்டம் தொழிலாளிகளின் ஆடையை அணிந்து கொண்டு போர்க்களத்துக்குப் புறப்பட்டு வந்தது. அகழ் தோண்டும் பணி எளிய பணியாக இருக்கவில்லை. அத்துடன் பருவ காலமும் குளிர்காலமாக இருந்தது. அதனால், அந்த நாள்களில் சஹாபா கடும் துன்பங்களை மேற்கொண்டார்கள். மற்ற தொழில்கள் முற்றிலும் நிறுத்தப்பட்டு விட்டிருந்ததால், அந்த நாள்களில் பசி மற்றும் பட்டினிக்கான இன்னலையும் பொறுத்துக் கொள்ள வேண்டி வந்தது. சஹாபாவிடம் பணியாளர்களும் அடிமைகளும்கூட இருக்கவில்லை. எனவே, எல்லா சஹாபாவுக்கும் சுயமே தம்முடைய கைகளால் வேலைகள் செய்ய வேண்டி வந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் தமது நேரத்தின் பெரும் பகுதியை அகழ் பக்கம் செலவழித்து வந்தார்கள். சிலவேளைகளில் தாமும் சஹாபாவுடன் இணைந்து தோண்டும் பணியையும் மண்ணை சேர்த்துவாரி இடம் மாற்றும் பணியையும் செய்து வந்தார்கள். அவர்களது இயல்பில் புத்துணர்ச்சியை நிலைபெறச் செய்ய வைப்பதற்காக, சில வேலைகளில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வேலை செய்யும் போது கவிதைகள் பாடத் துவங்கி விடுவார்கள். சஹாபா பெருமக்களும் சிலவேளை கவிதைகளில் பதில் கூறி வருவார்கள்.

அகழ் தோண்டுவதில் பெருமானார் (ஸல்) அவர்களின் பங்களிப்பு மற்றும் ஹுஸூர் (ஸல்) அவர்களின் துஆக்களின் பரக்கத்தால், சஹாபா தமது துன்பத்தையும் கடின உழைப்பினால் ஏற்படும் பெரும் களைப்பையும் மறந்தே விடுவார்கள். ஒருபக்கம் தூய கவிதைகள் பாடப்பட்டு வந்தன என்றால், மறுபக்கம் லேசான நகைச்சுவையும் இருந்து வந்தது. சஹாபாவின் தொடர்ச்சியான இந்த 24 மணிநேர முயற்சி மற்றும் ஹுஸூர் (ஸல்) அவர்களின் துஆக்களின் பரக்கத்தால், அகழ் முழுமையடைந்து விட்டது. அகழ் முழுமையடைந்த காலகட்டம் தொடர்பாக பல்வேறு அறிவிப்புகள் உள்ளன. 15 நாள்கள் மற்றும் ஒரு மாதம் ஆகிய அறிவிப்புகள் மீது அதிகம் பேர் கருத்தொருமிக்கிறார்கள். அகழின் நீளம் ஏறத்தாழ 6 ஆயிரம் அடி அல்லது ஒரு மூன்றரை மைல் தொலைவு இருந்தது. அகலம் 13, 14 அடியும், ஆழம் 10, 11 அடியும் ஆகிறது. இந்த அகழ் பல நூற்றாண்டுகள் வரை இருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தூய துணைவிமார்களும் ஆபத்தான இந்தத் தருணத்தில் வீரத்துடன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் துணை நின்றவர்களாகத் தென்படுகிறார்கள். சிலவேளை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், சிலவேளை ஹஸ்ரத் உம்மு சலமா (ரலி) அவர்கள் அல்லது ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள் சிலநாள்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் இருப்பார்கள்.

அகழ் தோண்டும் போது, பாறை உடையாமல் இருந்த நிகழ்வும் எடுத்துக் கூறப்படுகிறது. ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சிறிது தண்ணீர் கொண்டு வரச் செய்தார்கள். அதில் தமது அருளுக்குரிய உமிழ் நீரைக் கலந்தார்கள். பிறகு அன்னார் அல்லாஹ்விடம் துஆ கேட்டார்கள். மேலும், இந்தத் தண்ணீரை அந்தப் பாறை நிறைந்த நிலப்பகுதியில் தெளித்து விட்டார்கள். அதனால் அந்த நிலம் மென்மையாகி மணலைப் போன்று ஆகி விட்டது. மற்றோரு சந்தர்ப்பத்தில் (நடந்த நிகழ்வாக) இவ்வாறு கூறப்பட்டுள்ளது: ஹஸ்ரத் சல்மான் ஃபார்சீ (ரலி) அவர்களால் ஒரு பாறையை உடைக்க முடியாமல் இருந்தது. எனவே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அவர்களிடமிருந்து கடப்பாரையை வாங்கி ஓங்கி அடித்தார்கள். மேலும், மூன்று நற்செய்திகளும் கூறினார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் இது தொடர்பாக இவ்வாறு எழுதுகிறார்கள்: நெருக்கடியான மற்றும் சிரமமான நிலையில் அகழ் தோண்ட தோண்ட ஓரிடத்தில் இருந்து ஒரு பாறை வெளிப்பட்டது. அது எவ்வகையிலும் உடைந்தபாடில்லை. கடைசியில் நொந்து போய் சஹாபா பெருமக்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். மேலும், ‘ஒரு பாறை இருக்கிறது. அது உடைந்தபாடில்லை’ என்று பணிவுடன் கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் உடனடியாக அங்கு சென்றார்கள். ஒரு கடப்பாரையை எடுத்து, அல்லாஹ்வின் பெயரைக்கூறி அந்தப் பாறைமீது அடித்தார்கள். இரும்பு பட்டதனால் பாறையிலிருந்து ஒரு பொறி வெளிப்பட்டது. இதனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உரத்த குரலில், ‘அல்லாஹு அக்பர்’ என்று கூறினார்கள். மேலும், ‘எனக்கு சிரியா அரசின் திறவுகோல்கள் வழங்கப்பட்டுள்ளன. இறைவன் மீதாணையாக! இப்பொழுது சிரியாவின் சிவப்பு அரண்மனைகள் என் கண்முன் இருக்கின்றன’ என்று கூறினார்கள். இவ்வாறு அடித்ததனால், அந்தப் பாறை ஓரளவுக்குப் பிளந்து விட்டது.

இரண்டாவது முறை பெருமானார் (ஸல்) அவர்கள் மீண்டும் அல்லாஹ்வின் பெயரைக் கூறி கடப்பாரையை செலுத்தினார்கள். மீண்டும் ஒரு பொறி வெளிப்பட்டது. இதனால் அன்னார் மீண்டும் ‘அல்லாஹு அக்பர்’ என்று கூறினார்கள். மேலும், ‘இம்முறை எனக்கு பாரசீகத்தின் திறவுகோல்கள் வழங்கப்பட்டுள்ளன. மதாயினின்

வெள்ளை அரண்மனைகள் எனக்குத் தென்படுகின்றன' என்று கூறினார்கள். இம்முறை பாறை சற்று அதிகமாகவே பிளந்து விட்டது. மூன்றாவது முறை பெருமானார் (ஸல்) அவர்கள் மீண்டும் கடப்பாரையால் அடித்தார்கள். அதனால் மீண்டும் ஒரு பொறி வெளிப்பட்டது. பெருமானார் (ஸல்) அவர்கள் மீண்டும் 'அல்லாஹு அக்பர்' என்று கூறினார்கள். மேலும், இப்பொழுது எனக்கு ஏமனின் திறவுகோல்கள் வழங்கப்பட்டுள்ளன. இறைவன் மீது ஆணையாக! இப்பொழுது எனக்கு 'ஸன்ஆ'வின் வாயில்கள் காட்டப்படுகின்றன' என்று கூறினார்கள். இம்முறை அந்தப் பாறை முற்றிலும் தகர்ந்து தனது இடத்திலிருந்து விழுந்து விட்டது.

பெருமானார் (ஸல்) அவர்கள் கண்ட இவை ஆன்மிகக் காட்சிகள் ஆகும். ஆக, அந்த இக்கட்டான தருணத்தில், அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முஸ்லிம்களின் வருங்கால வெற்றிகள் மற்றும் வளங்களின் காட்சிகளைக் காட்டி, சஹாபாவிடம் தன்னம்பிக்கையையும் உற்சாகத்தின் ரூஹையும் ஏற்படுத்தினான். மதீனாவின் நயவஞ்சகர்கள் இந்த வாக்குறுதிகளைக் கேட்டு, 'வீட்டை விட்டு வெளியே கால் வைக்கவே ஆற்றல் இல்லையாம்! சீசர் மற்றும் கிஸ்ராவின் அரசாட்சிகளைப் பற்றி கனவு காண்கிறார்கள்' என்று முஸ்லிம்களை ஏளனம் செய்தார்கள். ஆனால், இறைவன் அளித்திருந்த இந்த வாக்குறுதிகள் தத்தமது நேரத்தில், அதாவது, சில வாக்குறுதிகளோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறுதி காலத்திலும், அதிகப்படியானவை ஹுஸூர் (ஸல்) அவர்களின் கலீஃபாக்களின் காலங்களிலும் நிறைவேறி முஸ்லிம்களின் ஈமான் அதிகரிப்பதற்கும் மனநிறைவுக்கும் காரணமாயின.

உணவு தொடர்பான அற்புதமும் இருக்கிறது. ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் இது தொடர்பான ஒரு நிகழ்வை இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்: ஒரு கலப்பற்ற சஹாபி ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் முகத்தில் பசியின் காரணமாக பலவீனம் மற்றும் வலுக்குறைவின் அறிகுறிகளைப் பார்த்து, பெருமானார் (ஸல்) அவர்களிடம் தம் வீட்டுக்குச் செல்ல அனுமதி கோரினார்கள். வீட்டுக்கு வந்து தம் மனைவியிடம், 'உன்னிடம் உண்பதற்கு எதுவும் இருக்கிறதா?' என்று கேட்டார்கள். அதற்கு அவர், 'ஆமாம், சிறிது கோதுமை மாவும், ஓர் ஆட்டுக் குட்டியும் இருக்கிறது' என்று கூறினார்.

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் ஆட்டை அறுத்தார்கள். மாவு பிசைந்தார்கள். பிறகு மனைவியிடம், 'நீ உணவை தயார் செய். நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சென்று வருகை தருமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்' என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்களின் மனைவி, 'பாருங்கள், என்னை இழிவுபடுத்தி விடாதீர்கள். உணவு குறைவாக இருக்கிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் அதிகம் பேர் வந்துவிட வேண்டாம்' என்று கூறினார். ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் மெதுவாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! {(ஸல்)} தாங்கள் தங்களுடைய சில தோழர்களுடன் வருகை தாருங்கள். உணவை உட்கொள்ளுங்கள்' என்று பணிவுடன் கேட்டுக் கொண்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'உணவு எவ்வளவு இருக்கிறது?' என்று கேட்டார்கள். ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் இதோ இவ்வளவு இருக்கிறது என்று பணிவுடன் கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள், 'அதிகம்' என்று கூறினார்கள். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் தம் அக்கம்பக்கம் பார்த்து உரத்த குரலில், 'அன்ஸாரிகள் மற்றும் முஹாஜிர்களின் கூட்டமே! புறப்படுங்கள்! ஜாபிர் நம்மை

(உண்ண) அழைத்துள்ளார்' என்று கூறினார்கள். இந்தக் குரலைக் கேட்டதும், பட்டினியாக இருந்த ஓர் ஆயிரம் சஹாபா அன்னாருடன் இணைந்து கொண்டார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்களிடம், 'நீர் விரைவாக செல்வீராக. உம் மனைவியிடம், 'நான் வரும் வரை பானையை அடுப்பிலிருந்து இறக்க வேண்டாம் என்றும், ரொட்டிகளையும் சுட ஆரம்பிக்க வேண்டாம் என்றும் கூறுவீராக' என்று கூறினார்கள். ஜாபிர் (ரலி) அவர்கள் வேகமாக சென்று தம் மனைவிக்குத் தகவல் கொடுத்தார்கள். அந்த அப்பாவிப் பெண், 'இப்பொழுது என்ன நடக்குமோ' என்று மிகவும் பதற்றமடைந்தார். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அங்கு சென்றடைந்ததுமே மிகவும் நிதானமாக பானை மற்றும் மாவுப் பாத்திரத்திற்காக துஆ செய்தார்கள். பிறகு, 'இப்பொழுது ரொட்டிகளைச் சுட ஆரம்பியுங்கள்' என்று கூறினார்கள். இதற்குப் பிறகு, ஹுஸூர் (ஸல்) அவர்கள் உணவை விநியோகிக்கத் துவங்கி விட்டார்கள். ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: எவன் கையில் என் உயிர் இருக்கிறதோ அ(ந்த இறை)வன் மீது ஆணையாக! அந்த உணவாலேயே எல்லாரும் வயிறு நிறைய உணவு உண்டு எழுந்து விட்டார்கள். அப்பொழுது எங்கள் பானை அதேபோன்று கொதித்துக் கொண்டிருந்தது. மாவு அதே போன்று வெந்து கொண்டிருந்தது.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* அஹ்ஸாப் போர் தொடர்பாக மற்ற விஷயங்களை இனி எடுத்துரைப்பேன். இன் ஷா அல்லாஹ். நான் துஆக்களின் பக்கம் கவனமூட்டிக் கொண்டே இருக்கிறேன். இதன் பக்கம் அதிகம் கவனம் வைத்திருங்கள். அல்லாஹ் நம்முடைய ஈமானை வலுப்படுத்துவானாக! வங்காள தேசம், பாக்கிஸ்தான் மற்றும் மற்ற இடங்களில் என எல்லா இடங்களிலும், எல்லா நாடுகளிலும் வாழும் எல்லா அஹ்மதிகளையும் எல்லாத் தீங்கிலிருந்தும் அல்லாஹ் பாதுகாப்பானாக!

உலகம் எந்த நெருப்பில் விழுந்து கொண்டிருக்கிறதோ, அதில் நுழைய மிக வேகமாக ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறதோ அதிலிருந்தும் உலகத்தைக் காப்பாற்றுவானாக! அல்லாஹ் கருணை புரிவானாக! அல்லாஹ் எல்லா ஆற்றல்களுக்கும் சொந்தக்காரன் ஆவான். இப்பொழுதும் இந்த மக்கள் சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்தினால், அல்லாஹ் இவர்களை இன்னல்களிலிருந்து வெளிக் கொணர முடியும். அல்லாஹ் இவர்களுக்கு அறிவும் புரிதலும் வரச் செய்வானாக!

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ یَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)